செய்தி வெளியீடு எண் : 184 நாள் : 27.01.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் முன்னிலையில் மாவட்ட அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (27.01.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் அரசின் திட்டங்கள் சேலம் மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திடும் வகையில் இன்றைய தினம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடன் மாவட்ட அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தை வழக்கமான ஒரு பணியாக எடுத்துக்கொள்ளாமல் நாம் செய்கின்ற மக்கள் பணிகளை சரியாகத்தான் செய்கிறோமா அல்லது செய்கின்ற பணிகளில் என்னென்ன முன்னேற்றங்கள் வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும் வகையிலும் நமக்கான ஒரு சுய பரிசோதனை செய்து கொள்வதற்காக இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

சேலம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக உள்ள மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களுடனேயே பயணித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் பொதுமக்களின் தேவைகளை முழுமையாக தெரிந்து வைத்துள்ளார்கள். பொது மக்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கி வருவதை செல்லும் இடங்களில் எல்லாம் காண முடிகிறது.

மேலும், இக்கூட்டத்தின் முக்கியமான நோக்கமே மக்கள் பிரச்சனைகளை சரிசெய்திட வேண்டும் என்பதாகும். குறிப்பாக, பொதுமக்களின் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடனுக்குடன் தீர்வுகாண பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

குறிப்பாக, வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டுவரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் குறித்தும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும், நான் முதல்வன் திட்டம் குறித்தும், பள்ளிக் கல்வித் துறையின் எண்ணும் எழுத்தும் திட்டம் குறித்தும், இல்லம் தேடிக் கல்வித் திட்டம் குறித்தும், புதுமைப் பெண் திட்டம் குறித்தும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் குறித்தும், முதல்வரின் முகவரி திட்டம் குறித்தும் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறார்கள். அதற்கு அரசு அலுவலர்கள் உறுதுணையாக இருந்து செயல்பட வேண்டும். அரசு அலுவலர்கள் அரசின் அனைத்துத் திட்டங்களையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு அனைத்து அரசு அலுவலர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. கார்மேகம், இ.ஆ.ப., சிறப்புச் செயலாக்கத் திட்ட அரசு சிறப்புச் செயலாளர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் தா.ப. கார்த்திக்கேயன், இ.ஆ.ப., மாண்புமிகு மாநகராட்சி மேயர் திரு.ஆ.இராமச்சந்திரன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் திரு.தா. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.சீ. பாலச்சந்தர், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, முன்னாள் அமைச்சர் திரு.டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.சிவலிங்கம் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in